பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 05 2026** **TUESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - நார்டிக் நாடுகளுக்கு இடையே தொழில்நுட்பம், நிலையான வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு குறித்த உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்றார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட அரசும், தொழில் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. மக்கள் நல்வாழ்வுத்துறை செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு விஜய் அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

4. அஇஅதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

5. ஆசிய **Taekwondo Poomske** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Rupa Bayor** வெண்கலப்பதக்கம் வென்றார்.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

இந்தியா - நார்டிக் நாடுகளின் 3-வது உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்றார்.

நார்வே நாட்டின் தலைநகர் **Oslo**-வில், இன்று தொடங்கிய இந்த உச்சிமாநாட்டில், இந்தியா, நார்வே, ஸ்வீடன், ஐஸ்லாந்து, பின்லாந்து, டென்மார்க் நாட்டு தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

தொழில்நுட்பம், நிலையான வளர்ச்சி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பது குறித்து இந்த உச்சிமாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

நார்டிக் நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகம் 19 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

இது மேலும் வளர்ச்சியடைவதற்கு இந்த உச்சிமாநாடு வழிவகை செய்யும் என்று எதிர்பார்ப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தியா — நார்டிக் நாடுகள் இடையே உறவுகளை மேம்படுத்த கடந்த 2022-ஆம் ஆண்டு டென்மார்க்கின் **Copenhagen** நகரில் முதலாவது மாநாடு நடைபெற்றது.

இந்த உச்சிமாநாட்டின் இடையே பிரதமர் திரு நரேந்திர மோடி, ஐஸ்லாந்து, பின்லாந்து, டென்மார்க் நாடுகளின் பிரதமர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட அரசும், தொழில் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்திய வர்த்தக உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், உலகளாவிய பிரச்சினைகளை சாதகமாக மாற்ற தொழில் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவிட் போன்ற பிரச்சினைகளை இந்தியா எதிர்கொண்டதாக கூறிய அவர், உற்பத்தியை அதிகரித்து முன்னேற வேண்டும் என்று தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஆயிரத்து 800 உலகளாவிய திறன் மையங்கள் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதன்மூலம், 20 லட்சம் பேருக்கு நேரடியாகவும், பத்து லட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மக்கள் நல்வாழ்வுத்துறை செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு விஜய் அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண் ராஜ், தலைமைச் செயலாளர் திரு சாய்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதனிடையே, மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா தலைமையில் சென்னையில் இன்று அத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், விளையாட்டுத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் செயல்திட்டங்கள் குறித்தும் உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

<<<<<<>>>>>>

அஇஅதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர், தலைமை செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர்களும், தலைமைச் செயலாளர்களும் தங்களது முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் திரு எடப்பாடி பழனிசாமிக்கு வழங்குவதாக உறுதிபட தெரிவித்துள்ளதாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கூட்டத்தில் கட்சியின் பணிகள் மற்றும் மக்கள் பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தமிழகத்தின் பொக்கிஷமான சோழர் கால செப்பேடுகளை நெதர்லாந்தில் இருந்து இந்தியாவிற்கு கொண்டுவருவதற்கான முயற்சி குறித்து தமிழக முதலமைச்சர் திரு

விஜய் எந்த கருத்தையும் தெரிவிக்காதது வருத்தம் அளிப்பதாக பிஜேபி சுட்டிக்காட்டியுள்ளது.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி-யின் மாநில செய்தித் தொடர்பாளர் திரு நாராயணன் திருப்பதி, கடந்த பத்தாண்டுகளாக வெளியுறவுத்துறை அதிகாரிகள் இதற்கான ஆய்வுகளையும், முயற்சிகளையும் மேற்கொண்டதன் அடிப்படையில் அந்த செப்பேடு இன்று இந்தியா வசமிடம் இருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>>

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நாளை வெளியிடப்பட உள்ள நிலையில், மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலன் காக்கும் வகையில், தொலைபேசி வாயிலாக ஆலோசனைகளை பெறலாம் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசின் செய்திக்குறிப்பில், ''நட்புடன் உங்களோடு'' திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் ஆலோசனைகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், பெற்றோர்கள் **1 4 4 1 6** அல்லது **104** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு

ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாமக்கல் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற மாவட்ட தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — கண்ணன் — 35 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழகத்தின் கோவை, திருப்பூர், நீலகிரி, மதுரை, கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 55 Sec. )***

<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுவரும் கட்டுமானப் பணிகளை ஆட்சியர் திரு பிரதாப் இன்று ஆய்வு செய்தார்.

---------------

தூத்துக்குடி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடர்பான பயிற்சி முகாம் ஆட்சியர் திரு விஷு மகாஜன் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக 325 தனியார் பள்ளி வாகனங்களை ஆட்சியர் திரு தினேஷ்குமார் இன்று ஆய்வு செய்தார்.

---------------

வேலூர் மாவட்டம் காட்பாடியில் தனியார் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்த ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி, வாகன ஓட்டுநர்களுக்கான மருத்துவ முகாமை தொடங்கிவைத்தார்.

------------------

மதுரை மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திரு பிரவீன்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். 14 பேர் படுகாயமடைந்தனர்.

-----------------

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக, நீர்வரத்து வினாடிக்கு தொள்ளாயிரத்து 11 கனஅடியாக அதிகரித்துள்ளது.

----------------

சென்னை கிண்டி வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் வரும் வெள்ளிக்கிழமை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜெகடே தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய **Taekwondo Poomske** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Rupa Bayor** வெண்கலப்பதக்கம் வென்றார்.

உலான்பட்டரில் நடைபெற்ற **30** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் — அர்ஜுன் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-19, 21-15** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Christo Popov** — **Toma Junior Popov** இணையை வென்றது.

**<<<<<<END>>>>>>**